(குறுக்கீடுகள்) காவலர்கள், வெளியேற்றுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) அ.தி.மு.க.வைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக இடையூறு பண்ணுவதால், அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள், உடனே வெளியேற்றுங்கள் அவ்வளவு பேரையும்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியிலிருந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

லாபியில் நின்று இடையூறு பண்ணுகிறார்கள். வெளியேற்றுங்கள். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன ஞானசேகரன்?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் குறித்து நான் நேற்றைக்கு முன்தினம் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தேன். ஆகவே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No, no. அது பரிசீலனையில் இருக்கிறது. உட்காருங்கள்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்